## பயிர்ப் பாதுகாப்பு

### அ. பூச்சி மேலாண்மை

### முக்கியப் பூச்சிகளுக்கான பொருளாதார சேதநிலை

| பூச்சிகள் | பொருளாதார சேதநிலை |
|---|---|
| தண்டு குருத்து அல்லது பிணைப்பான் | ஒரு சதுர மீட்டருக்கு 2 புழுக்கள் (அ)<br>10 சதச் செடிகளில் சேதம் |
| இலைக்கு சேதாரம் விளைவிப்பவை | இளம்பருவத்தில் ஒரு சதுர மீட்டருக்கு 10 புழுக்கள் (அ) பூக்கும் பருவத்தில் ஒரு சதுர மீட்டருக்கு 2 புழுக்கள் |

### பூச்சி மேலாண்மை முறைகள்

| பூச்சிகள் | மேலாண்மை முறைகள் |
|---|---|
| **இலை மற்றும் தண்டு பிணைப்பான்** | ▪ 0.03 சதம் கொண்ட வேம்பு சார்ந்த மருந்துகளை இருமுறைத் தெளிக்கவும். |
| **காய்த் துளைப்பான்**<br><br>**எள் காய் ஈ**<br><br>**இலைப் பிணைப்பான்** | ▪ **கீழ்க்கண்ட பூச்சிக்கொல்லி மருந்துகளில் ஏதேனும் ஒன்றினை 25 கிலோ, எக்டர் என்ற அளவில் விதைத்த 25, 35 மற்றும் 50 நாட்களுக்குப் பிறகு தூவிகட்டுப்படுத்தவும்**<br>என்டோசல்பான் 4 சதத் தூள்<br>பாசலோன் 4 சதத் தூள்<br>குயினால்பாஸ் 1.5 சதத் தூள்<br>மாலத்தியான் 5 சதத் தூள்<br><br>▪ **கீழ்க்கண்ட பூச்சிக்கொல்லி மருந்துளில் ஏதேனும் ஒன்றினை ஒரு எக்டருக்கு 500 லி. தண்ணீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தவும்**<br>பாசலோன் 35 இ.சி. 1000 மி.லி.<br>குயினால்பாஸ் 25 இ.சி. 1000 மி.லி.<br>டைகுளோர்வாஸ் 76 டபுள்யு எஸ். சி. 500 மி.லி.<br>மானோகுரோட்டோபாஸ் 36 எஸ். எல். 625 மி.லி.<br>என்டோசல்பான் 35 இ.சி. 1000 மி.லி.<br>கார்பரில் 50 நனையும் தூள் 1000 கி.<br>வேப்பம் பருப்புச் சாறுக் கரைசல் 5 சதம், வேப்பம் எண்ணெய் கரைசல் 2 சதம் (இரண்டு முறை). |
| | ▪ ஒவ்வொரு முறைத் தெளிக்கும் போது வெவ்வேறு பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும். ஒரே பூச்சிக்கொல்லி மருந்தினைத் தொடர்ந்துப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். |
| **சேமிப்பில் தாக்கும் பூச்சிகள்** | |
| அரிசிக் கூன்வண்டு<br>அரிசி அந்துப்பூச்சி | **சேமிக்கப்பயன்படுத்தும் கோணிப்பைகளில் கீழ்க்கண்ட ஏதேனும் ஒரு பூச்சிக்கொல்லி மருந்தினைத் தூவிப் பயன்படுத்தவும்**<br>மாலத்தியான் 5 சதத் தூள்<br>பாசலோன் 5 சதத் தூள்<br>கார்பரில் 10 சதத் தூள்<br>▪ விதைகள் நன்குக் காய்ந்தவுடன் 1 கிலோ ஊக்குவிக்கப்பட்டக் களிமண்னை 100 கிலோ விதைக்கு என்ற அளவில் கலந்துப் பயன்படுத்தவும். |